

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் சென்னீர்குப்பத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், ம.ராஜி, பி.டி.சி.செல்வராஜ், நிவேதா ஜெசிகா, மேயர் உதயகுமார், சி.ஜெரால்டு, மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மயிலை மேற்குப் பகுதி

## வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் நந்தனம் கி. மதி வேண்டுகோள்!

சென்னை, ஜன.22–

மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி. மதி எம்.சி. அறிக்கை வருமாறு:

சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை மேற்குப்பகுதி வட்ட செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று (22.1.2026 – வியாழக்கிழமை) காலை 11 மணியளவில் மயிலை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் நடைபெறுகிறது.

மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் கோ.வி. லெனின் ஆகியோர் ஆலோசனை வழங்குகிறார்.

இதில் வட்ட கழக செயலாளர்கள் டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.ஆர்.ராஜா, சுரேஷ் குமார், அ.நாகராஜன், மு.இ.ஏழுமலை, மூ.ராஜேந்தி ரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு பகுதிச் செயலளார் நந்தனம் கி. மதி கேட்டுக் கொண்டுள்ளார்.

பொருள் :

பிப்.11 அன்று தாம்பரம் – படப்பையில் சென்னை மண்டலத்துக்கான 'என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி' வாக்குச் சாவடிக் குழுவினருக்கான பயிற்சி மாநாட்டில் பங்கேற்பது மற்றும் கழக ஆக்கப்பணி



ஆலந்தூர் 161 வது வட்டத் துணைச் செயலாளர் முன்னாள் நகர மன்ற உறுப்பினர் எம். சச்சீஸ்வரியின் கணவர் இரா. மோகன் 20.1.2026 அன்று இயற்கை எய்தினார். அன்னாரின் உடலுக்கு அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர் எஸ் பாரதி, மண்டல குழு தலைவர் என். சந்திரன், பகுதி செயலாளர் பி. குணாளன்,கோல்ட் பிரகாஷ், சாய் ஜெயகாந்த், பூபாலன், கீதா ஆனந்தன், எம்.எஸ். கே. இப்ராகிம், எம்.ஆர். சீனிவாசன்,ஜெ. நடராஜன், முரளி கிருஷ்ணன், உலகநாதன், ஏசுதாஸ்,ர.பாபு,ரமணா,கோட்டீஸ்வரன்உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

### கழகத் தலைவர் தலைமையில் 2026–ல் திராவிட மாடல் 2.0 அரசு அமைந்திடும் வகையில்

## திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகத்தினர் இரவும் பகலும் பாராமல் பணியாற்றிடுவோம்!

### மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு. நாசர் சிறப்புரை!

திருவள்ளூர்,ஜன.22–

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாநகர. ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் சென்னீர்குப்பத்தில் நடைபெற்றது இதில் மாவட்ட அவைத் தலைவர் மா.ராஜி தலைமை வகித்தார் .

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினரும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ், நிவேதா ஜெசிகா, மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார். பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், கு.விமல் வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி. குமார், எஸ்.காஞ்சனாசுதாகர், எஸ். சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

கூட்டம் முன்னதாக ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் வரவேற்புரையற்றினார்

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு நாசர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய சிறப்புரை ஆற்றினார்

அப்போது பல்வேறு தீர்மானங்களை விளக்கி பேசினர்

20012026 அன்று நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1 வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடாகப் பரப்புரை திராவிட மாடல் அரசின் மகளிர் நலத்திட்டங்களை (உரிமைத் தொகை, விடியல் பேருந்து, புதுமைபெண் திட்டம், மகளிர் சுய உதவிக்குழு போன்றவை) மக்களிடம் குறிப்பாக பெண்களிடம் கொண்டு சேர்ந்தல் வேண்டும்.

பிப்ரவரி 1 முதல் மார்ச் 8 வரை, ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 10 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்கள் வழங்கி ஆதரவு திரட்டவேண்டும்.

2 தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை பிப்ரவரி 1முதல் பிப்ரவரி 28 வரை. சட்டப்பேரவைத் தேர்தலுக்காக தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரையை மேற்கொள்ளும் வகையில் தலைமை கழகத்தால் அனுப்படும் நட்சத்திரப் பரப்புரையாளர்கள் ஒவ்வொரு தொகுதியிலும் 4 இடங்களில் தெருமுனை கூட்டங்கள் அல்லது அரங்கக் கூட்டங்களாக பரப்புரை நடத்துவார்கள். நட்சத்திரப் பரப்புரையாளர்கள் தங்கள் சுற்றுப்பயணத்தின் போது ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் முக்கியப் பிரமுகர்கள் மாணவர்கள் இளைஞர்கள் மற்றும் தொழில்முனைவோரைச் சந்தித்துத் தேர்தல் பரப்புரை கலந்துரையாடல் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்திட வேண்டும்.

3. என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பயிற்சி மாநாடுகள் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (BIC மற்றும் வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) ஆகியோரைத் தேர்தல் பணிக்கு முழுமையாகத் தயார் செய்யும் வகையில் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி வாக்குச்சாவடிக்குழுவினருக்கான பயிற்சிமாநாட்டில் பங்கேற்ற வேண்டும். சென்னை/விழுப்புரம் மண்டலம் : பிப்ரவரி 11 அன்று, தாம்பரம் அடுத்த படப்பையில் நடைபெறும்.

4. 'ஸ்டாலின் தொடரட்டும்: தமிழ்நாடு வெல்லட்டும்' மாநில மாநாடு 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் கழத்தின் வெற்றியை பறை சாற்றும் வகையில் மார்ச்8 அன்று தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் 10 இலட்சம் கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்ளும் ஸ்டாலின் தொடரட்டும்: தமிழ்நாடு வெல்லட்டும் மாபெரும் கழக மாநில மாநாட்டில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகத்தினர் அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

5. மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம். தி.மு.க மாணவர் அணி சார்பில் பூவிருந்தவல்லி, குமணன்சாவடியில், ஜனவரி 25 அன்று மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகத்தினர் அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

6.தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு சுற்றுப்பயணம். தேர்தல் அறிக்கை குழு நமது திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு வரும் பிப்ரவரி 14 ஆம் தேதி வருகை தர உள்ளது. தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழுவின் பயணத்தில் ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோரைச் சந்திக்க ஏற்பாடுகளைச் செய்திட வேண்டும். கழகத்தினர் மிக மிக குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே இருக்க வேண்டும். தங்களுடைய கருத்துகளை திமுக செவிமடுத்துக் கேட்கிறது என்பதே மிக முக்கியமான செய்தியாக இருக்க வேண்டும். எனவே, கருத்துக்க கேட்புக் கூட்டமானது கழகத்தினர் கலந்து கொள்ளும் கூட்டமாக இன்றி மாவட்டங்களில் உள்ள முக்கியஸ்தர்களுடனான சந்திப்பாக அமைந்திடும் வகையில் ஏற்பாடுகளைச் செய்திட வேண்டும். அதேபோல் மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், தங்கள் பகுதியில் நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள், பணிகளை தங்களின் லெட்டர் பேடில் எழுதி கொடுத்திடவேண்டும்.

ஓய்வை மறந்திடு; முழுமையான யான வெற்றி கைவசமாகும் வரை உழைத்திடு! அடுத்த 3 மாதங்களும் அமைச்சர் முதல் கிளைக் கழக நிர்வாகி வரை கண்துஞ்சாது களத்தில் சுழல வேண்டும்!

என்று தமிழக முதல்வர், கழக தலைவர் நமக்கு உத்தரவிட்டுள்ளார்கள். நமது திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டிற்கு செய்துள்ள சாதனைத்திட்டங்களைப் எடுத்துக்கூறி, மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் 2026 சட்டமன்றத் தேர்தலில் வென்று திராவிட மாடல் 2.0 அரசு அமைந்திடும் வகையில் பணியாற்றிடுவோம். இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், மாநகர ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் சன்.பிரகாஷ், ஜி.ஆர்.திருமலை, டி.தேசிங்கு, ஆர். ஜெயசீலன், என்.இ.கே.மூர்த்தி, ஜி. ராஜேந்திரன், தி.வை.இரவி, சே.பிரேம் ஆனந்த், முரளி கிருஷ்ணன், பேபிசேகர், பொன்.விஜயன், தி.வே.முனுசாமி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.சுரேஷ் குமார், வே.தியாகராஜன் வழக்கறிஞர் வினோத், ஏ.ஜெ.பவுல், சங்கீதா சீனிவாசன், ஆர். பிரவீன் குமார் பொறியாளர் மோகன் நெசவாளர் அணி என்.சண்முகம் த.குமரேசன், ஒ.ஆர்.நாகூர் கனி, எம்.இளையான், கு.தமிழ்ச்செல்வி, ஏ.விமல் ஆனந்த், ஏ.ஜி.ரவி, நிஜலிங்கம், க.ஷாஜகான், ஐ.ஜாக்கப், பசீர் அகமது அலிகான், ஆர்.ஆதிகேசவன், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

## சென்னை வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம் இன்று (22.01.2026 வியாழக்கிழமை) மாலை 5.00 மணியளவில், இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

ஜனவரி 25 தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் மொழிப்போர் தியாகிகள் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துதல்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் திருவொற்றியூரில் கலந்து கொள்ளும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்.

கழக ஆக்கப் பணிகள்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.ஏ. சாமிநாதன்

### சனவரி 22 (2011)



மாணவப் பருவத்தில் "தமிழ்மன்றம்" என்ற அமைப்பினை தனது பகுதியில் துவக்கிய இவர், அப்போதிலிருந்தே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

ஒன்றுபட்ட கோவை மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய இவர், 1975இல் கோவையில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டினை சிறப்பாக நடத்தினார்.

1958ல் புளியம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவராகவும் – 1967ல் கோபிச்செட்டிபாளையம் நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான சி. சுப்பிரமணியத்தை எதிர்த்து, கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே தொகுதியில் 1971ல் ஈ.வி.கே. சம்பத்தை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதியில் உள்ள ஏழையெளிய மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றார். குறிப்பாக நெருக்கடிகால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

## "அன்னம் தரும் அமுதகரம்" 336 வது நாள்!

### திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



சென்னை,ஜன.22-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20 ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 336 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (21.1.2026), திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 71 அ, ஈடன் கார்டன் ஜமாலியா. 2) வட்டம் 74, ஏகாங்கிபுரம் மெயின் தெரு, ஓட்டேரி, ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருகர மேயர் பிரியாராஜன், ப.தாய கம் கவி எம்.எல்.ஏ, செ.தமிழ் வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோ ஸ்கான், கா. ராஜ்முக மது, திரு.வி.க.நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம். இசட்.அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.தமிம், பொல்லு டி.சுரேஷ்குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா.பி. தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பா ளர்கள்: சொ.வேலு, S. முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் - கார்த்திக் மோகன் ஏற்பாட்டில்

## அண்ணாநகர் 101 (அ) வட்டத்தில் 80,000 குடும்பங்களுக்கு பொங்கல் பரிசு! நே.சிற்றரசு வழங்குகிறார்!

### தயாநிதி மாறன் - ச.பரமசிவம் - மெட்டில்டா கோவிந்தராஜ் - க.கோவிந்தராஜ் பங்கேற்பு! சி.பி.திருமலை அறிக்கை!

சென்னை, ஜன. 22

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 (அ) வது வட்டத்தில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் ஏற்பாட்டில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழா இன்று (22.01.2026 வியாழக்கிழமை) காலை 8.30 மணியளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணா நகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வட்டச் செயலாளர் க. கோவித்த ராஜ் ஆகியோர் பொதுமக்களுக்கு பொங்கல் பரிசுகளை வழங்குகின்றனர்.

நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள் வருமாறு :

கெஜலட்சுமி காலனி 1 வது தெரு, 2 வது தெரு, 3 வது தெரு, 4 வது தெரு, கதிரவன் காலனி 1 வது தெரு, 2 வது தெரு, மஞ்சகொல்லை பள்ளடு, மஞ்சகொல்லை தெரு, திருவீதி அம்மன் மெயின் தெரு, திருவீதி அம்மன் 1 வது தெரு, திருவீதி அம்மன் 2 வது தெரு, பூந்தமல்லி நெடுஞ்சாலை மசூதி தெரு, பிரசன்ன விநாயகர் கோயில், கன்னியம்மன் கோயில் தெரு, செங்கல்வராயன் தெரு, செல்லம்மாள் தெரு, தேவகி அம்மாள் தெரு, கஜபதி தெரு, லட்சுமி டாக்கீஸ் ரோடு, நாதமுனி தெரு, அய்யாவு தெரு, செங்குந்தர் தெரு 1 வது மெயின் ரோடு, 5 அடுக்கு குடியிருப்பு, கல்லறை சாலை, தமிழர் நகர், ராஜீவ் காந்தி தெரு, எம்.ஜி.ஆர். தெரு, அன்னை இந்திரா நகர் ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் 101 (அ) வது வட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், (BLA2), (BDA), (BLC), வட்டச் செயற்குழு உறுப்பினர்கள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள் கழக உடன் பிறப்புகள், செயல்வீரர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 101 (அ) வது வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை கேட்டுக்கொண்டுள்ளார்.

### இ.கே.மதி தலைமையில்

## 122வது வட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

### வட்ட செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் அறிக்கை!

சென்னை, ஜன. 22-

கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம். கி .மதி எம்.சி. அறிவுறுத்தலின் படி, 122 வது வட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (22.01.2026 - வியாழக்கிழமை) மாலை 7.00 மணியளவில், ஆழ்வார்பேட்டை தெருவில் உள்ள வட்ட செயலாளர் அலுவலகத்தில் வட்ட அவைத்தலைவர் இ.கே.மதி தலைமையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்திற்கு 122வது வட்டத்திற்குட்பட்ட மாவட்ட பிரதிநிதிகள், பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், பாக முகவர்கள் (BLA2), பாக தகவல் தொழில்நுட்ப அணி உறுப்பினர்கள் (BDA) மற்றும் வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு 122 வது வட்ட தி.மு.க. வட்டச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜாசுரேஷ்குமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தாம்பரம் தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 33,வது வட்டத்தில் உள்ள மௌலானா நகர், இளைஞர் நற்பணி நலச்சங்கம் மற்றும் மகளிர் குழு இணைந்து நடத்தும் 2 வது ஆண்டு சமத்துவ பொங்கல் விழாவில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ., கேரம், செஸ், கோலம் ஆகிய போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார் உடன் 4,வது மண்டல குழு தலைவர் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி.காமராஜ் அவர்களும் 33,வது வட்ட செயலாளர் எம்.வினோத் உள்ளிட்ட கழக முன்னணியினரும் பொது மக்களும் பெரும் திரளாக பங்கேற்றனர்.



தமிழர் திருநாளம், தை திருநாள் பொங்கல் திருநாளை முன்னிட்டு கழக மாநில மீனவரணி சார்பில் மாநில மீனவரணி துணை தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் திராவிட பொங்கல் விழா கே.வி.கே.குப்பம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெற்றது. இதில் மாற்றுத்திறனாளிகள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட 10 ஆயிரம் பேருக்கு கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கினார். இதில் வட்ட செயலாளர் கே.பி.சொக்கலிங்கம் எம்.சி., வரவேற்பில், மாவட்ட அவை தலைவர் குறுஞ்சி கணேசன், வி.ராமநாதன், இரா.முருகேசன், ஆசைதம்பி, எம்.எஸ்.நாகலிங்கம், இ. ரமேஷ், இரா. சந்துரு, ஏகா.கார்த்திகேயன், சேகர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.